பக்கங்கள் 20

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 30 திங்கட்கிழமை 15.09.2025 | அதிர்வு 45 |
|---|---|---|---|

## சிறீநேசன் எம்.பி. விபத்தில் காயம்



(கனகராசா சரவணன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

03▶

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று ஆரம்பம்


தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாட்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று காலை 9 மணியளவில் யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அருகே அவர் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்று, தொடர்ந்து, நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் ஆரம்பமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின்

03▶



# மாகாண சபைத் தேர்தலுக்குப் பயந்தே அதை இழுத்தடிக்கின்றது அநுர அரசு

## அம்பாறையில் சுமந்திரன் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

“மாகாண சபைத் தேர்தலைச் சந்திப்பதற்கு அநுர அரசு பயப்படுகின்றது. அதனால்தான் இந்தத் தேர்தலை அநுர அரசு இழுத்தடிக்கின்றது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கின்றது. ஆனால், இந்த அரசு தேர்தலைச் சந்திப்பதற்குப் பயந்து கொண்டு இதனை இழுத்தடிப்பதாக எமக்குத் தோன்றுகின்றது.

03▶




இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு நீண்ட காலத்தின் பின்னர் நேற்று அம்பாறை மாவட்டம் ஆலயடிவேம்பில் சுமுகமாக நடைபெற்று முடிந்தது.

நேற்று இப்பத்தியில் நான் குறிப்பிட்டமை போல ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்துக்கு தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தில் இருந்து, ஒவ்வொரு விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன.

கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது பற்றிய விடயம் நீண்ட நேரம் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் ஆகிய மூன்று தொடர்பிலும் கட்சி முடிவுக்கு மாறாக

02▶

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

செயல்பட்டவர்கள் தொடர்பில், இதுவரை கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள் தவிர, ஏனையோர் தொடர்பில் என்ன செய்வது என்று நீண்ட நேரம் பரிசீலிக்கப்பட்டது. அத்தகைய அனைவருக்கும் எதிராக தீவிர ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் வலியுறுத்திய போதிலும், எனினும் ஒரே சமயத்தில் பலரையும் கட்சியை விட்டு வெளியேற்றுவது போன்ற நடவடிக்கையைத் தவிர்த்து, தவறிழைத்தோருக்கு அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி, எனினும் அந்தக் குற்றத்துக்காக அடுத்த இரண்டு வருட காலத்துக்கு அவர்கள் கட்சிக்குள் அவதானிப்பு நிலையில் (Probation Period) வைத்திருக்கப்படுவார்கள் என்பதை அவர்களுக்கு அறிவிக்குமாறு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த அவதானிப்புக் காலத்தில் அவர்கள் கட்சிக்குள்ளும் கட்சிமூலமும் புதிய பொறுப்பு எதனையும் பெற வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என்பது கவனிக்கத் தக்கதாகும்.

ஒழுக்காற்று நடவடிக்கையின் ஓர் அங்கமாக விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்ட உறுப்பினர்களில் இன்னும் 12 பேர் பதில் அளிக்கவில்லை எனவும், மேலும் திருகோணமலை மாவட்டத்தில் அத்தகைய அறுவர் விளக்கம் கோரி அனுப்பப்பட்ட கடிதங்களை ஏற்க மறுத்து, அஞ்சல் தரப்பிடமே அவற்றைத் திருப்பி விட்டுள்ளனர் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொதுச் செயலாளரிடமிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தை ஏற்க மறுத்தமை மிக மோசமான விடயம் என்று நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது

அத்தகையோருக்கும், விளக்கம் அனுப்பத் தவறிய ஏனையோருக்கும் அவர்கள் இடமிருந்து இந்த விவகாரத்தில் விளக்கம் அளிப்பதற்கு விடயம் எதுவும் இல்லை என்று கருதப்படுவதாக நினைவூட்டல் கடிதம் ஒன்றை அனுப்பவும், அதன் பின்னரும் அவர்கள் பதிலளிக்காமல் விட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அதன் அடிப்படையில் அடுத்த இரண்டு வருடங்களுக்குக் கட்சிக்குள் புதிய பொறுப்புக்கள் எதுவும் வழங்கப்படாமல் அவர்களின் நடத்தை அவதானிக்கப்படும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தவும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தம்மைக் கட்சியிலிருந்து இடைநிறுத்திய முடிவை விலக்குமாறு கோரி கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளைத் தலைவராக இருந்த வைத்தியர் சிவமோகன் அனுப்பிய கடிதம் நேற்றைய கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. எனினும் இவ்விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் சத்தியலிங்கம், ரவிகரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் நேற்றைய கூட்டத்திற்கு வருகை தராத காரணத்தினால, இந்த விடயத்தை அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் ஆராய்வது என முடிவு செய்து அந்த விடயம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஒட்டி – அதாவது தம்மை கட்சியிலிருந்து இடைநிறுத்தியமைக்கு எதிராக – வைத்தியர் சிவமோகன் முன்னர் யாழ் மாவட்ட நீதி மன்றத்தில் கட்சிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை பின்னர் தாமாகவே அவர் கை வாங்கி விட்டார் என்பது தெரிந்ததே. அந்த வழக்கில் அவருக்குச் சார்பாகச் சத்தியப் பிரமாண ஆவணங்களை தாக்கல் செய்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அந்த ஆவணத்தில் தெரிவித்த விடயங்களை சுமந்திரன் நேற்று மத்திய குழு கூட்டத்தில் வாசித்துக் காட்டினார். மருத்துவர் சிவமோகனின் உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டமை தவறு என்ற சாரப்படவும், அவரது உறுப்புரிமை மீளளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் சிறிதரன் அந்த ஆவணங்களை சமர்ப்பித்திருந்தார்.



# இன்று வெப்ப நிலை எச்சரிக்கை மட்டத்தில்

வெப்பமான வானிலை நிலைமைகள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று நாட்டில் வெப்ப நிலை அதிகரித்துக் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் மொனராகலை மாவட்டத்தின் சில பகுதிகளிலும், மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, எச்சரிக்கை மட்டத்தில் இருக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, நிலவும் வெப்பமான காலநிலையினால் பணியிடங்களில் உள்ளவர்கள் அதிகளவான நீரைப் பருக வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இயலுமானவரை வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரு வாரங்களுக்குள் புதிய பிரேரணை

## ஆணையாளரின் கண்காணிப்புக்குள் இலங்கை

இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் மேற்பார்வையின் கீழ் இருக்கும் வகையில் புதிய பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்படி, மனித உரிமைகள் பேரவையின் அதிகாரத்தை நீடிக்கும் இந்த வரைவு பிரேரணை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பேரவையில் நிறைவேற்றப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்தநிலையில், இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்த முன்னேற்றம் தொடர்பில் அடுத்த விரிவான அறிக்கை, 2027 செப்டெம்பரில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை தொடர்பான நாடுகளான பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் ஆதரவு வழங்கவுள்ளன.

இதன்படி இலங்கைக்கான பொறுப்புக்கூறலுக்கான கால அவகாசமும் நீடிக்கப்படவுள்ளது.

# மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும்

## பெப்ரல் அமைப்பு வலியுறுத்தல்

நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பெப்ரல் அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டு விவகாரங்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்னவுக்கு அனுப்பிய கடிதத்தில், பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி, மாகாணசபை அமைப்பு ஒரு பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்பாக மீண்டும் நிறுவப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தற்போது அது அதிகாரிகள் கையில் மட்டுமே இருப்பது ஜனநாயகத்திற்குப் புறம்பானது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வாக்களிக்கும் உரிமை அரசியலமைப்பின் 3வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மக்களின் இறையாண்மை அதிகாரத்தின் ஒரு பகுதியாகும் என்றும், நீண்டகால தாமதம் ஜனநாயக செயல்முறைகள் மீதான மக்களின் நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளதாகவும் ரோஹண ஹெட்டியாராச்சி எச்சரித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாகாண சபை...

இந்த அரசுக்கு ஏதோவொரு வகையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் கிடைத்து விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் கூட அநுர குமார திஸாநாயக்க 50 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை. 42 சதவீத வாக்குகளைத்தான் அவர் பெற்றிருந்தார். முதல் தடவையாக இலங்கை வரலாற்றில் 50 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானவர் அவர்தான்.

அநுரகுமார ஜனாதிபதியான பிற்பாடு ஒரு அலை ஒன்று உருவானது. அதிலிருந்து ஏதோவொரு அடிப்படையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அவர் தலைமையிலான அரசுக்குக் கிடைத்து விட்டது. ஆனால், இந்த அரசுக்கு ஆரம்பத்தில் வாக்களித்த மக்கள் கூட இன்று தாங்கள் பிழையானவர்களைத் தெரிவு செய்து விட்டோம் என்ற ஒரு மன நிலையில் இருந்து வருகின்றார்கள்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்த மக்களின் நிலைப்பாடு தெளிவாக விளங்கி இருக்கின்றது. எங்களது கட்சியும் கூட இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எழுச்சி கண்ட நிலையில் காணப்படுகின்றது.

எனவேதான் மாகாண சபைத் தேர்தலை நடத்தி விட்டு அதில் தோல்வியடைந்து விட்டால் என்ன செய்வது என்று அநுர அரச தரப்பினர் வெட்கப்படுகின்றனர். அதனால்தான் என்னவோ அந்தத் தேர்தலை நடத்தாமல் இருக்கின்றனர். தேர்தலுக்குப் பயந்து தேர்தலில் மக்களுக்கு முகம் கொடுப்பதற்கு பின்வாங்கிக் கொண்டு தேர்தலைப் பிற்போடுவது ஒரு முறையற்ற செயற்பாடாகும் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

– என்றார்.

### தியாக தீபம்...

அரசியல்துறைப் பொறுப்பாளரான திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி முன்வைத்து உணவையும் நீரையும் தவிர்த்துப் போராட்டத்தை முன்னெடுத்தார். அவரின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு உயிர்நீத்தார்.

யாழ்ப்பாணம், ஊரெழுவைச் சேர்ந்த திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன் என்பதாகும்.

### சிறிநேசன் எம்.பி...

ஞானமுத்து சிறீநேசன் விபத்தில் காயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு அண்மையாக அவரின் வாகனமும் கார் ஒன்றும் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை – ஆலையடிவேம்பில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்குச் சிறீநேசன் எம்.பி. சென்றுவிட்டுத் திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்த அவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# எக்ஸ் - பிரஸ் பேர்ள் மின்னஞ்சல் தரவு அழிப்பு: சர்வதேச நிபுணர்கள் உதவியை நாடும் இலங்கை

எக்ஸ்-பிரஸ் பேர்ள் கொள்கலன் கப்பலின் மின்னஞ்சல் தரவுத்தளத்தை அழித்து, கொழும்பு துறைமுகத்தின் துறைமுக மாஸ்டரை தவறாக வழி நடத்த முயன்றவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் தடயவியல் கணக் காய்வை நடத்த தகுதி வாய்ந்த சர்வ தேச நிறுவனத்தின் சேவைகளைப் பெறுவது குறித்து நீதி அமைச்சு இன்று அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப் பிக்கவுள்ளது.

உள்ளூர் தொழில்நுட்ப நிபுணத்துவம் அத்தகைய விரிவான கணக்காய்வை நடத்த போதுமானதாக இல்லை என்ப தைக் கருத்தில் கொண்டு, தடயவியல் கணக்காய்வை நடத்த சர்வதேச உத வியை சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க கோரியிருந்தார்.

இதற்கிடையில், இந்த விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட எக்ஸ்-பிரஸ் பேர்ளின் உள்ளூர் முகவரான சீ கொன்சார்டியம் லங்காவின் மூன்று ஊழியர்களை இந்த வாரம் பிணையில் செல்ல, கொழும்பு மேலதிக நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

சந்தேக நபர்கள் தலா 2.5 மில்லியன் ரூபாய் சொந்தப் பிணையில் செல்ல நீதி வான் அனுமதித்தார்.

முன்னதாக, இலங்கைக்கு ஏற்பட்ட சேதத்துக்காக, கப்பலின் உரிமையா ளர்கள், இயக்குநர்கள் மற்றும் உள்ளூர் முகவருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட 1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீட்டுத் தொகையின் முதல் தவணை செப்டம்பர் 25 ஆம் திகதி செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இறக்குமதி வாகனங்கள் விரைவில் விடுவிப்பு

இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 1,000 வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள தேக்க நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி அமைச்சகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் பிரதிநிதிகள் இந்த வாரம், இது தொடர் பில் நீதிமன்றத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பார்கள்.

முன்னதாக, குறைந்த வரிகளைச் செலுத்தும் முயற்சியில் எல்லை தாண் டிய கடன் கடிதங்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்டநிலையில், குறித்த வாகனங் கள் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக துறைமுகத்திலேயே உள்ளன.

இதனையடுத்து, குறித்த வாகனங் களை அவற்றின் சொந்த நாட்டிற்கு மீண்டும் ஏற்றுமதி செய்வதே ஆரம்பத் திட்டமாக இருந்தது.

எனினும், அது உலக வர்த்தக அமைப்பு மற்றும் சுங்கத் திணைக்களத்துக்கு இடையிலான மதிப்பீட்டு ஒப்பந்தத்தை மீறுவதாக இருந்ததால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்தநிலையில், ஆறு இறக்குமதியா ளர்கள் தங்கள் வாகனங்களை விடு விக்க மாவட்ட நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரியுள்ளனர்.

இந்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் முத லாம் திகதியன்று வாகன இறக்கு மதி தளர்த்தப்பட்டதிலிருந்து, சுமார் 213,500 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதில் உந்துருளி களும் அடங்கும்.

இந்த இறக்குமதிகளின் மொத்த மதிப்பு 314 பில்லியன் ரூபாய்கள் ஆகும்.

அதே நேரத்தில் வாகனங்களிலிருந்து கிடைத்த மொத்த வரி வருவாய் 446.84 பில்லியன்களாகும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# குடத்தனையில் வாள் வெட்டு சம்பவம் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் காயம்





யாழ். வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் வாள் வெட்டுக்குழு மேற்கொண்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் குடத்தனை மேற்கைச் சேர்ந்த கோவிந்தசாமி உதயகலா (வயது 59) என்பவரும் அவரது மகன் கோவிந்தசாமி கபில்ராஜ் (வயது 25) மற்றும் அவரது மருமகனான கந்தசாமி நிதர்சன் (வயது 33) ஆகிய மூவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கபில்ராஜ் மற்றும் நிதர்சன் ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை க்கு மாற்றப்பட்டுள்ளனர்.

படுகாயங்களுக்குள்ளான இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியுள்ளனர். அப்போது கார் ஒன்றில் சென்றவர்கள் இவர்களை முந்திச் சென்றதுடன் தாறுமாறாக பயணித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளுடன் இடிபட்டதை அடுத்து இருதரப்புக்கும் இடையே வாக்குவாதம் இடம்பேற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று முந்தினம் சனிக்கிழமை இரவு 9.00 மணியளவில் வன்முறை கும்பல் வாள்கள் சகிதம் வீட்டிற்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது வீட்டில் இருந்த தளபாடங்களை அடித்து உடைத்து சேதமாக்கியதுடன், அங்கிருந்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மூவர் படுகாயமடைந்தனர். இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக வன்முறைக் கும்பலின் கட்டுப்பாட்டில் அந்த வீடு இருந்துள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதிலும் வாள் வெட்டுக்குழு இரவு 11.00 மணிக்கு பின்னர் அங்கிருந்து வெளியேறிச் சென்றபின்னரே தாமதமாக வந்ததாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் வன்முறை கும்பல் மீதான அச்சம் காரணமாக அந்தக் குடும்பத்தினர் சம்பவம் நடந்த வீட்டில் இருந்து பொருட்கள், கால்நடைகள் என்பவற்றை ஏற்றிக்கொண்டு நேற்று உறவினர் வீட்டிற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.



# விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

விபத்தில் சிக்கிய வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ். திருநெல்வேலி – கலாசாலை வீதி பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் மகாலிங்கம் (வயது 72) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

மேற்படி வயோதிபர், கடந்த 5ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். இதன்போது ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில், படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மண்டைதீவு மனிதப் புதைகுழிக் கிணறுகளை தோண்டக் கோரும் வழக்கு இன்று நீதிமன்றில்

(ந.லோகதயாளன்)

தீவகத்தில் 1991ல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவுப் பகுதியில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் அங்குள்ள தேவாலயக் காணியின் கிணறு உட்பட மூன்று கிணறுகளில் போட்டு மூடப்பட்டன என்று கூறப்படுவது தொடர்பில் விசாரித்து, அந்தக் கிணறுகளைச் சட்டரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு இன்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது

யாழ். குடாநாட்டின் தீவகப் பகுதியைப் படையினர் கைப்பற்றியபோது படையினரும் ஓர் ஒட்டுக் குழுவும் இணைந்து பலரைக் கைது செய்து, சுட்டுக் கொன்று, மண்டைதீவின் தேவாலயக் கிணறு உள்பட 3 இடங்களில் உள்ள கிணறுகளில் போட்டு மூடினர் எனக் கண் கண்ட சாட்சிகளின் அடிப்படையில் சில மத குருமாரும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிகின்றது.



அடையாளம் காணப்பட்ட கிணறுகளை அகழ உத்தரவிடக்கோரியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப் படவுள்ளதோடு வழக்கில் இன்று பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு; தோட்ட சம்மேளனத்திற்கு ஒருமாத கால அவகாசம்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான நிலைப்பாட்டை அறிவிப்பதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான இறுதி தீர்மானம் எதிர்வரும் 07ஆம் திகதி அறிவிக்கப்பட்டும் என தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,350 ரூபா என்ற நாளாந்த சம்பளம் 1,700 ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.



# போதைப்பொருளுடன் இந்திய பிரஜை கைது

8 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான குஷ் போதைப்பொருளை நாட்டிற்கு கொண்டுவந்த இந்திய பிரஜை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையை சேர்ந்த 33 வயதான ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 09.45 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த அவர், இந்தியாவின் மதுரை நோக்கி பயணிப்பதற்காக விமான நிலையத்தின் வருகை முனையத்தில் காத்திருந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது மேற்படி இந்திய பிரஜையின் பயணப்பை சந்தேகத்திற்கிடமானது என குறிப்பிட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள், சோதனையிட்ட போது போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேவை: திலீபன்கள்!

ஈழத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் நாற்பதாயிரத்துக்கும் அதிகமான போராளிகள் தங்கள் இன்னுயிரைத் தமது இன மக்களுக்காக ஈகம் செய்திருக்கிறார்கள்.

இருப்பினும் அவர்களிடையே அகிம்சை என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்தி, தமிழ் மக்களின் விடிவுக்காக நீரின்றி, உணவின்றி, பட்டினியால் தன்னுயிரை அணு அணுவாய்ப் பலி கொடுத்து, இனத்துக்காகத் தன்னை மாய்த்த உத்தமன் - மகத்தான தியாகப் போராளி - திலீபன். அவனின் உறுதியும் ஈகமும் போற்றப்படத்தக்கவை.

அஹிம்சை வழியில் - அறநெறியில் - சத்தியத்தின் பாதையில் - தன்னையே ஒறுத்து, மக்களுக்காகப் போராட்டத்தை முன்னெடுக்கும் மார்க்கத்தை உலகுக்குப் போதித்த மகான் மகாத்மா காந்தி. அவரின் காந்தி தேசத்திற்கே அந்தத் தத்துவத்தை செயல் முறையில் நிரூபித்துப் போதித்தவன் தியாகி திலீபன் என்றால் அது மிகையாகாது.

தனது தாயக தேசம் மீதான அவனது கனவும், அவாவும், விடுதலை வேட்கையும் அத்துணை பெரியவை. அதுவே அவனை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தியாகம் செய்யத் தூண்டியது என்று சொன்னால் அந்த விடுதலை உணர்வின் மகத்துவம் புரிந்து கொள்ளத்தக்கது.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய அந்த மாவீரன் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாது, 12 நாள்கள் உண்ணா நோன்பிருந்து ஈழத் தாயோடு சங்கமம் ஆனான். அவன் தனது உண்ணா நோன்பை தொடங்கிய தினத்தின் 38 ஆவது ஆண்டில் நாம் இப்போது - இன்று - நிற்கின்றோம்.

30 ஆண்டுகால ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து வந்துவிட்டது. போராட்ட வடிவத்தை மாற்ற வேண்டிய நிலையில், அதைச் சரிவர செய்ய முடியாமல் தமிழினம் தடுமாறிக் கொண்டிருப்பது இன்றைய நிலைமை.

இலங்கைத் தீவில் பன்னிரண்டு சதவீத மக்களை மாத்திரம் கொண்ட தமிழினம் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் தனது தாயகத்தை தனித்துவ தேசமாக - தனியரசாக - கொண்டு நடத்தியதென்றால் அதற்குக் காரணம் ஆயுதப் போராளிகளின் பரிசுத்த ஈகமே என்பது தெளிவு.

அந்தப் போராட்டத்தின் அஞ்சல் கோலை, அஹிம்சை வழியில் முன் கொண்டு செல்ல வேண்டிய கட்டத்தில் இருக்கும் தமிழினம், அந்த அஹிம்சை வழிப் போராட்டத்தை முன்னெடுக்க பற்றுறுதியும், திடசங்கற்பமும், விடாமுயற்சியும், தளராத நம்பிக்கையும் கொண்ட தலைமைகள் இல்லாமல் தடுமாறுகிறது.

இந்தச் சமயத்தில் அகிம்சை போராட்டத்தை வழிநடத்துவதற்கு அந்த மார்க்கத்தில் அசையாத நம்பிக்கை கொண்ட ஒரு தலைவன் தேவைப்படுகிறான். திலீபன் போன்ற உறுதிமிக்க - காந்திய தேசத்துக்கே காந்தியத்தைப் போதித்த - ஒரு தலைவன் இன்று தமிழினத்தை அஹிம்சை வழியில் வழி நடத்த அவசியமாகின்றான்.

தமிழர்கள் வரலாற்றில் திலீபன் போன்று அகிம்சை மார்க்கத்தில் போராட்டங்களை உறுதியாக முன்னெடுத்து வழிநடத்துகின்ற தலைவர்கள் வந்தால் மாத்திரமே தமிழினம் மீட்சி பெறும் திசையில் முன்நகரும் என்பது திண்ணம்.

நம் இனத்தை இந்த இக்கட்டில் இருந்து வழிநடத்த புதிய திலீபன்கள் வருவார்களா? வரலாறுதான் பதில் கூற வேண்டும்.

# முன்னேற்றத்துக்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை

## நளின் பண்டார தெரிவிப்பு




நாட்டின் முன்னேற்றத்துக்காக எவ்விதமான வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கையாள முடியாத பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதாகவும் நளின் பண்டார குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளுக்கும் அவை நிறைவேற்றப்பட்டவற்றுக்கும் இடையேயான இடைவெளி என்பது வானுக்கும் பூமிக்கும் இடையிலான இடைவெளிபோல் உள்ளதாக நளின் பண்டார குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்குக் குறிப்பிடத்தக்க நேரத்தை வழங்கியும் பெரிதளவிலான செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் உள்ள விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த நளின் பண்டார, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சில சலுகைகள், கௌரவங்கள் மற்றும் பாதுகாப்பை வழங்க அரசாங்கங்களுக்குப் பொறுப்பு உள்ளது என்றார்.

இருப்பினும், சில தலைவர்கள் அல்லது முன்னாள் ஜனாதிபதிகள் இந்த வசதிகளைத் தவறாகப் பயன்படுத்தினால், அது முற்றிலும் தவறு என நளின் பண்டார சுட்டிக்காட்டினார்.

ஆனால் குறைந்தபட்ச சலுகைகளை வழங்குவது ஏற்றுக்கொள்ளத்தக்கது எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கான சலுகைகளை நீக்கியமை பொருத்தமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 2026 ஆம் ஆண்டில் நடைபெறும் பரீட்சைகள் தொடர்பில் அறிவிப்பு




2026ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாடசாலை பரீட்சைகள் தொடர்பாக விசேட அறிவிப்பு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2025 (2026) க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெப்ரவரி 17 முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும்.

2026 க.பொ.த உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 10 முதல் செப்டம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறும்.

2026 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெறும்.

பொதுத் தகவல் தொழில்நுட்பம் 2026 ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி நடைபெறும்.

2026 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 8 முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# 21 கோடி ரூபா மதிப்புள்ள தங்க பிஸ்கட்கள் பறிமுதல்



இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் தங்க பிஸ்கட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுகளின் பெறுமதி 21 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊழியர்கள் வெளியேறும் பகுதியில், மேற்படி நபர் அவருடைய காலுறையில் தங்க பிஸ்கட்டுகளை மறைத்து வைத்திருக்கும் போதே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 54 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.



# ரூ. ஒரு கோடி பெறுமதியான நகை, பணம் மட்டக்களப்பில் வீடு உடைத்துத் திருட்டு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள புன்னைச்சோலை பகுதியில் வீடு ஒன்றின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான முப்பத்திமூன்றரைப் பவுண் தங்க ஆபரணங்களை திருடிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னைச்சோலை சேமக்காலை வீதி 4 ஆம் குறுக்கு வீதியில் சனிக்கிழமை இரவு அந்த வீட்டில் அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளனர். இதன் போது வீட்டின் குசினி பகுதித் கதவை உடைத்து வீட்டுக்குள் உள்நுழைந்த திருடர்கள் அங்கு அறைகளில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 20 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சுமார் முப்பத்திமூன்றரைப் பவுண் தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் முறைப்பாடு செய்தமையையடுத்து பொலிஸார், தடவியல் பிரிவுப் பொலிஸாரின் உதவியோடு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாமிமலை நகரில் ஆயுர் வேத மருத்துவ முகாம்

(செ.தி.பெருமாள்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மஸ்கெலியா பிரதேச சபை இன்று 15 ஆம் திகதி சாமி மலை நகரில் ஆயுர் வேத மருத்துவ முகாமை நடத்துகின்றது.

இன்று ஆரம்பமாகும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மஸ்கெலியா பிரதேச சபை சாமி மலை நகரில் உள்ள ஆலய கலாசார மண்டபத்தில் இந்த இலவச மருத்துவ ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் காலை 8.30 மணிக்கு மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்டு மாலை 3.30 நிறைவு பெறும் என பிரதேச சபையின் உதவி தவிசாளர் பி.ராஜ் அசோக் தெரிவித்தார்.

மருத்துவ முகாமிற்கு அம்பேகமுவ பிரதேச ஆயுர்வேத மருத்துவ சாலை வைத்தியர் மற்றும் மஸ்கெலியா ஆயுர் வேத வைத்திய சாலையில் உள்ள வைத்தியர்கள் கலந்த கொள்ள உள்ளனர்.

# வேலை தேடிச் சென்ற யுவதியின் மீது வல்லுறவு நிதி நிறுவன முகாமையாளருக்குத் தண்டனை!

## மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் நிதி நிறுவனம் ஒன்றில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற யுவதி ஒருவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றின் முகாமையாளருக்கு 20 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்த நீதிமன்றம், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 15 இலட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும், அந்தப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2 வருடக் கடூழிய சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை அளித்தார்.

மட்டக்களப்பில் இயங்கிவரும் நிதி நிறுவனம் ஒன்றில் உள்ள வெற்றிடத்திற்கு விண்ணப்பித்த பெண் ஒருவர் கடந்த 2019 செப்டம்பர் 4 நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தார். நிதி நிறுவனத்திற்குச் சென்ற பெண்ணை நிதி நிறுவன முகாமையாளர் அங்கிருந்து வீடு ஒன்றுக்கு அழைத்து சென்று பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையையடுத்து நிதி நிறுவன முகாமையாளர் கைது செய்யப்பட்டார்.

நிதி நிறுவன முகாமையாளருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெற்று வந்துள்ள நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நிதி நிறுவன முகாமையாளர் அவருக்கு எதிராக 3 குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாட்சிகள் மற்றும் தடயப் பொருள்கள் மூலம் குற்றவாளியாக இனம் காணப்பட்டார்.

எனவே ஒரு குற்றசாட்டுக்கு 5 இலட்சம் ரூபா வீதம் 3 குற்றச்சாட்டுகளுக்கும் 15 இலட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட பெண்ணுக்க வழங்குமாறும் –

அந்த பணத்தை செலுத்த தவறும் பட்சத்தில் 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும், மேலும் 20 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.



# ஐங்கரநேசனின் ‘வேர் முகங்கள்’ வெளியீடு

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பு “வேர் முகங்கள்” என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விக் வரவேற்புரையை கலை, இலக்கியச் செயற்பாட்டாளர் கை.சரவணனும் கருத்துரைகளை ஊடகவியலாளர் சர்மிலா வினோதினி மற்றும் சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோரும், வெளியீட்டுரையை “எங்கட புத்தகங்கள்” பணிப்பாளர் கு.வசீகரனும் வழங்கினர்.

நூல் வெளியீட்டு வைக்கப்பட்டதுடன் நூலாசிரியர் பொ.ஐங்கரநேசன் இறுதியில் உரையாற்றினார்.




















# பார்த்தீபன் பசியோடு இருக்கிறான்!

**(தியாக தீபம் திலீபன் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் உண்ணாநோன்பிருந்து தன் உயிரைத் தன் இனத்துக்காக ஈந்த நினைவழியா நாள்களின் 38 ஆவது ஆண்டு நிறைவு இப்போது. 38 ஆண்டுகளுக்கு முன்னர் திலீபன் இதே செப்ரம்பர் 15 இல் தான் தனது தற்கொடைப் போராட்டத்தை ஆரம்பித்தான். அதையொட்டி இக்கவிதை இங்கு பிரசுரமாகின்றது)**

தேரோடும் நல்லூர் வீதியிலே
ஆலய முன்றலில்
ஊரே திரண்டிருக்க
ஊரெழு பெற்ற மைந்தன்
பன்னிருநாள் பசித்திருந்து
தியாக வேள்வியில்
தனதுயிரை தியாகம் செய்தானே
புரட்டாதித் திங்கள் இருபத்தியாறினிலே!

தேசம் மலர தேசியம் வாழ
கோரிக்கை ஐந்தினை வைத்து
உயிரை காணிக்கை ஆக்கிய தியாகியே
உயிரை உருக்கி உணர்வினைப் பிழிந்து
உலகிற்கு வெளிச்சம் தந்த
ஊரெழு பெற்ற மெழுகுவர்த்தியே
தியாகத்தின் உச்சத்தை வென்ற
உன்னத தியாகி நீதானய்யா!

பாரததேசம் பாசாங்கு காட்டி
தியாகத்தின் கோரிக்கையை
பாராமுகம் ஆக்கியதே
பன்னிருநாள் வேள்வியில்
பார்த்தீபன் உயிரும்
நாம் பார்த்திருக்க கண்முன்னே
பசியோடு ஆகுதியானதுவே !

காலங்கள் கடந்த போதும்
தியாக மைந்தனின் தியாகம்
தீயாக இருக்கிறதே இன்றும்
தியாக மைந்தனை நினைத்திடுவோம்
தியாகங்களைப் போற்றிடுவோம்
பார்த்தீபன் இன்றும்
பசியோடு தான் இருக்கின்றான்



-கந்தசாமி தசரூபன்-



# அரசுக்கு நெருக்கடியாகும் செம்மணி மனிதப் புதைகுழி



திருமதி நந்தினி குலராஜ்

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது. அதில் இலங்கையின் பொறுப்புக் கூறல், நீதி விசாரணை தொடர்பான விடயங்களை ஒட்டி, விவாதங்கள் இடம் பெற்றுள்ளன.

சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ள இந்த நிலையில் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரமும் ஐ.நா, மனிதவுரிமைகள் பேரவையில் பேசு பொருளாக மாறியுள்ளது. இலங்கையில் அடை யாளம் காணப்பட்டுள்ள மனித புதைகுழிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதன் விசாரணைகள் சர்வதேச தரத்தின் படி நடத்தப்பட வேண்டும் என பிரிட்டன் ஜெனீவா அமர்வில் வலியுறுத்தியும் உள்ளது. அதுவும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் தாயகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் செம்மணி மனிதப் புதைகுழியானது ஓர் இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சித்திர வதைகளையும், மிலேச்சத்தனமான நடவடிக்கைகளையும், அரச படைகளின் கொடூர முகத்தையும் வெளிப்படுத்தி இனப்படுகொலையின் சாட்சியாக நிற்கின்றது.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டு கட்டமாக அகழ்வுகள் மேறகொள்ளப்பட்டு அது நிறைவுக்கு வந்துள்ளது.

செம்மணி சித்துபாத்தியில் மனித எலும்புக் கூடுகள் இருப்பதாக தெரிவித்ததையடுத்து, யாழ் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய முதல் கட்டமாக 9 நாள்களும், அதன் பின் இரண்டாம் கட்டமாக 45 நாள்களுமாக 54 நாள்கள் முழுமையாக அகழ்வுப் பணிகள் இடம் பெற்றிருந்தன. இதன்போது 240 மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் 239 எலும்புக் கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் 72 சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக கூடுகளும் சான்றுப் பொருள்களும் செம்மணி சித்துபாத்தியில் தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக இடம்பெற்ற திட்டமிட்ட இனப்படுகொலையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

14 இடங்களில் எலும்புக்கூடுகள் குவியல்களாகவும், சில எலும்புக் கூடுகள் பாகங்கள் உடைந்த நிலையிலும் மீட்கப்பட்டன. கைகள் பின்னால் கட்டப்பட்டு இருந்த நிலையிலும் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு பச்சிளம் குழந்தை முதல் முதியவர் வரை பலர் கொல்லப்பட்டுள்ளனர். இது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார் மத்தியிலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மனங்களிலும் மேலும் காயத்தையும், ஆறாத வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ள இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதில், செம்மணி சித்துபாத்தியில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமான எச்சங்கள் ஆடைகள் இல்லாமல் ஆழமற்ற குழிகளில் புதைக்கப்பட்டுள்ளன. இது நீதிக்குப் புறம்பான கொலைகள் குறித்த சந்தேகங்களை எழுப்புகிறது. கடுமையான குற்றங்களை விசாரிப்பதற்கு ஒரு சுயாதீன அலுவலகத்தை நிறுவுதல், மரபணு பகுப்பாய்வு மற்றும் கார்பன் டேட்டிங் ஆகியவற்றிற்கான வெளிநாட்டு நிபுணத்துவத்தைப் பெறுதல் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு தேசிய மரபணு வங்கியை உருவாக்குதல் ஆகியவற்றை இலங்கை மனித வுரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

யாழ் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா செம்மணி சித்துபாத்தி புதைகுழியைப் பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அங்கு செல்லவில்லை. அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது செம்மணி தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி▼



# அரசுக்கு நெருக்கடியாகும் செம்மணி மனிதப் புதைகுழி

தொடர்ச்சி▲

அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தெரிவிக்கையில், செம்மணி விவகாரம் நீதிமன்றத்துடன் தொடர்புடையதாகும். நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்திற்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குரிய வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும். விசேட குழு ஒன்றினால் அதறகுரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன்." - என்று தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெற்று வரும் நிலையில் கடந்த கால அரசாங்கங்கள் போன்று ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் ஆகியோரின் க கருத்துகள் வெறும் கண்துடைப்புக்கான கருத்துகளாக இல்லாமல் உண்மையாவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பரிகார நீதியைப் பெறும் வகையில் நீதியான விசாரணைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான சாட்சிகளைப் பெறுவதற்கு மாணவி கிருசாந்தி படுகொலை வழக்கில் மரண தண்டனைக் கைதியாகவுள்ள இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ஷவையும் பயன் படுத்த முடியும். ஏனெனில் செம்மணியில் 300- 400 பேர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என அவர் முன்னர் தெரிவித்து இருந்தமையுடன், செம்மணி புதைகுழி குறித்து சாட்சியமளிக்கத் தான் தயார் என அவர் தனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு கடிதம் மூலமும் தெரிவித்துள்ளார். அவரது சாட்சியங்களின் அடிப்படையில் இதனுடன் தொடர்புடையவர்கள், அவர்களுக்கு கட்டளை பிறப்பித்தவர்கள் எனப் பலரை இனங்காணக் கூடியதாக இருக்கும். படை தரப்பின் வன்ம வெறியாட்டத்தை விசாரிக்க இந்த இலங்கை அரசாங்கம் தென்னிலங்கையில் இருந்து வரும் அழுத்தங்களுக்கு அடிபணியாது இடம் கொடுக்குமா.. என்ற கேள்வி பாதிக்கப்பட்ட மக்களிடம் எழுந்தும் உள்ளது.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுகள் இடம்பெற வேண்டும். எதிர்வரும் 18ஆம் திகதி யாழ் நீதவான் நீதிமன்றத்தில் அதற்கான திகதி தீர்மானிக்கப்படும். 8 வாரங்கள் அந்த அகழ்வு இடம்பெற வேண்டும் என தற்போது எதிர்பர்க்கபடுகிறது. இதற்கான நிதி, நிபுணத்துவ சேவை மற்றும் ஏனைய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தால் மட்டுமே அந்த அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும். அதனை அரசாங்கம் செய்து கொடுத்து நீதியான வகையில் பக்கச் சார்பின்றி விசாரணை நடத்துமா என்ற கேள்வி பாதிக்கப்பட்ட மக்களிடம் எழுந்துள்ளது.

செம்மணி என்பது எவராலும் மறந்து விட முடியாத இடம். அதற்கு காரணம் மாணவி கிருசாந்தி படுகொலை. மாணவி கிருசாந்தி படுகொலையின் 29 ஆம் ஆண்டு நிறைவு கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றிருந்தது. மரணித்த கிருசாந்தியின் ஆத்மா மற்றும் அங்கு புதைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினதும் ஆத்மாக்களும் இன்று அங்கு நடந்த மனிதப் பேரவலத்தை வெளிப்படுத்தி சான்றுகளாக கண் முன்னே வந்து நீதி கேட்கின்றன.

ஆக, இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள செம்மணி சித்துபாத்தி விடயத்தை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது, பட்டலந்த மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் போன்று செம்மணி விசாரணையும் நீதியான முறையில் பக்கச்சார்பின்றி இடம்பெறுமா? தென்னிலங்கையின் அழுத்தங்களுக்கு அடிபணியாது படுகொலைக்களுக்குக் காரணமான படைத் தரப்பைச் சேர்ந்தவர்களுக்கு தண்டனை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரை இந்த அரசாங்கம் துடைக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

# வழமையாகத் திலீபனின் ஆவணக் காட்சியகம் நடக்கும் இடத்தை நேரத்துடனேயே பதிந்து பிடுங்கியது சைக்கிள்

## விட்டுத் தர விநயமாகக் கோருகின்றது மணிவண்ணன் தரப்பு

தியாக தீபம் திலீபனுடைய ஆவணக் காட்சியகம் மற்றும் மாவீரர் நாள் நினைவேந்தல் ஆகியவற்றை நாங்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்ற இடத்தை வழங்கத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒத்துழைக்க வேண்டும் என யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் (சைக்கிள் சின்னக் கட்சியில்) இருந்து சட்டத்தரணியும் முன்னாள் யாழ் மாநகர மேயருமான மணிவண்ணன் தலைமையில் பிரிந்து தனி அரசியல் அணியாக இயங்கிய பார்த்திபனும் ஏனையோரும் தற்போது தமிழ் மக்கள் கூட்டணியில் சங்கமித்துள்ளனர்.

பார்த்திபன் நேற்று மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தியாகதீபம் திலீபன் அண்ணாவினுடைய நினைவேந்தல் அவர் உண்ணாவிரதம் இருந்த நாளான நாளைய தினம் (இன்று) தொடங்குகின்றது. இந்த நிலையில் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம், தியாக தீபம் திலீபன் அண்ணாவினுடைய வாழ்க்கை வரலாற்றையும், அவர் உண்ணாவிரதம் இருந்த நாள்களிலே அவர் அனுபவித்த வேதனைகளையும், அவருடைய தளராத உறுதியையும் ஆவணப்படுத்தி ஓர் ஆவணக் காட்சியகமாக 2023 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் தொடர்ச்சியாக நல்லூரில் திலீபன் அண்ணாவுடைய பிரதான தூபி அமைந்திருக்கின்ற பகுதியில் - அதாவது யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான காணியிலே - உரிய நடைமுறைகளுடன் கடந்த இரண்டு வருடங்களாகச் செய்து வந்திருந்தோம்.

இந்த நிலையிலே இந்த வருடமும் ஆவணக் காட்சியகத்தை மீண்டும் செய்வதற்கு நாங்கள் முயற்சித்த பொழுது ஏற்கனவே தமிழ் தேசிய மக்கள் முன்னணிஅந்தஇடத்தினைமுன்பதிவுசெய்து விட்டது என்ற காரணத்தினால் எங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.

நாங்கள் தொடர்ச்சியாகவே அந்த இடத்திலே அந்த ஆவணக் காட்சியகத்தை செய்து வருகின்றோம். இந்த நிலையிலே அந்த நிகழ்வைக் குழப்பும் வகையிலே அல்லது அந்த நிகழ்வை நீர்த்துப் போக செய்கின்ற வகையிலே இந்தச் செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன. நாங்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து அதே இடத்திலேயே மாவீரர் நாள் நிகழ்வுகளையும் செய்து வருகின்றோம். 25,000ற்கும் மேற்பட்ட மாவீரர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளை நாங்கள் அந்த இடத்திலே வைத்திருந்தோம்.

2019 ஆம் ஆண்டு நாங்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலே இருந்த பொழுது, குறித்த கல்வெட்டுகளைவைத்து அந்த நிகழ்வினை முதன்முதலாக ஆரம்பித்த பொழுது எங்களுடைய கட்சிக்குள்ளேயே பல எதிர்ப்புகள் வந்தன. எங்களுடைய கட்சித் தலைமை எனக்கும் என்னுடைய சக மாநகர சபை உறுப்பினர்களாக இருந்த சிலருக்கும் நேரடியாகவே சொல்லி இருந்தார்கள். அந்த இடத்திலே அவ்வாறான நிகழ்வுகளை செய்யக்கூடாது என்றும் நாங்கள் கோப்பாயிலே இருக்கின்ற மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மக்கள் வருவதை தடை செய்கின்றோம் அல்லது அவர்களை வர முடியாமல் இங்கே நாங்கள் திசை திருப்புகின்றோம் என்ற நிலையிலே எங்களுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டிருந்தது. இருந்த பொழுதும் நாங்கள் பின் நாளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து விலகிய பிற்பாடு 2022ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அந்த இடத்திலே மாவீரர் நாள் நிகழ்வுகளையும் நாங்கள் செய்து வருகின்றோம்.

தமிழ் மக்கள் பேரெழுச்சியுடன் தங்களுடைய மாவீர செல்வங்களுடைய பெயர் தாங்கிய கல்வெட்டுகளுக்கு முன்னால் சுடரேற்றி ஓர் உணர்வு பூர்வமாக வழிபட்டு சென்ற கடந்த காலங்கள் இருக்கின்றன. அந்த வகையிலே அந்த இரண்டு நிகழ்வுகளையும் இந்த முறை தாங்கள் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே முன் பதிவு செய்திருக்கின்றார்கள். உண்மையில் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான அந்த காணியிலே யாரும் முன்பதிவு செய்யலாம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஓர் அறம் ஒன்று இருக்க வேண்டும். அந்த அறத்தின் படி அவர்கள் செய்யவில்லை என்பதே எங்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாகும். ஏனென்றால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மாவீரர் நாளை கோப்பாயிலே வருடா வருடம் செய்து வருகின்றார்கள். அவர்கள் கோப்பாயிலே வருட வருடம் செய்கின்ற அந்த இடத்திலே நாங்கள் சென்று அதனை முன் பதிவு செய்து அல்லது அந்த காணியை எடுத்து மாவீரர் நாளை நாங்கள் செய்யப் போகின்றோம் என்று சொல்வது எவ்வாறு ஓர் அறம் இல்லாத செயல்பாடோ அதேபோல தான் இதுவும். கிட்டுப் பூங்காவிலேயே மாவீரர் வாரத்தில் ஆசிரியர் பொ.ஐங்கரநேசன் செய்யும் கார்த்திகைப் பூ கண்காட்சியும் ஒவ்வொரு வருடம் நடைபெற்றுவருகிறது. அதுவும் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான பகுதியே. அந்த நிகழ்வைக் குழப்பும் வகையிலே நாங்கள் அதை அவருக்கு முன்னால் முன்பதிவு செய்து அந்த இடத்திலே நாங்கள் வேறு நிகழ்வுகளை நடத்தலாம். ஆனால் அதுவும் ஓர் அறம் இல்லாத செயல்பாடு.

அந்த வகையிலே இவ்வாறாக ஒவ்வொரு தரப்புக்களும் ஒவ்வொரு இடத்திலே மக்களை பேரெழுச்சி கொள்கின்ற நிகழ்வுகளை செய்கின்ற பொழுது எல்லா இடங்களையும் கைப்பற்ற வேண்டும், நாங்களே செய்ய வேண்டும் என்கின்ற அந்த எண்ணக்கருவின் கீழ் இவ்வாறு செயல்படுவது உண்மையிலே அறமற்ற செயற்பாடாகும். உண்மையில் இந்த செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்று கூறி அல்லது இந்த செயற்பாட்டை விலக்கிக் கொண்டு எங்களுக்கு வழமை போல் கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றது போல் எங்களுக்கு அந்த காணியை வழங்க வேண்டும் என்று தமிழ் தேசியமக்கள்முன்னணியினுடையதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு நாங்கள் கடிதம் மூலம் ஒரு கோரிக்கையை வழங்கி இருந்தோம். அந்த கோரிக்கை கடிதத்தை நேரடியாக அவரது அலுவலகத்துக்கும் அதே நேரத்தில் பதிவுத்தபாலிலும் நாங்கள் வழங்கி இருந்தோம். ஆனால் இன்று வரைக்கும் எந்த ஒரு பதிலும் எங்களுக்கு தரவில்லை.

இன்றைக்கு அந்த நிகழ்வுகளை குழப்புகின்ற வகையிலே நடைபெறுகின்ற இந்த செயற்பாடுகளை நிறுத்தி அந்த நிகழ்வுகளை நாங்கள் ஒற்றுமையாக செய்கின்ற வகையில் எங்களுக்கு அந்த நிகழ்வை தொடர்ச்சியாக செய்ய நீங்கள் வழி சமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை இந்த இடத்திலே நாங்கள் விடுகின்றோம்.

அதே நேரத்தில் உண்மையில் எங்களுடைய மக்கள் பேரெழுச்சி கொள்ள வேண்டும், எங்களுடைய இலக்கை நோக்கி நாங்கள் நகர்த்த வேண்டும் என்று சொன்னால் எங்களுக்குள்ளே இருக்கின்ற இந்தப் பாகுபாடுகளைக் களைந்து விட்டு அந்த அந்த இடங்களை அவரவர் பாட்டுக்கு அந்த மக்களை எழுச்சி கொள்ளுகின்ற செயற்பாட்டுக்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த வகையிலே இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தியாகதீபம் திலீபன் அண்ணாவுடைய ஆவணக் காட்சி இடத்தையும் அதே நேரம் மாவீரர் நினைவேந்தலையும் நடத்துவதற்கு நாங்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்ற அந்த இடத்தினை வழங்குமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்துக்கு நாங்கள் கோரிக்கை விடுகின்றோம் - என்றார்.




# தாயகத்தில் நடைபெறும் நினைவேந்தல்களை ‘கஜேந்திரகுமார் அண்ட் கோ’ குழப்புகின்றது!

## திட்டமிட்டு முன்னெடுப்பதாக மணிவண்ணன் சீற்றம்

தாயகத்தில் நடைபெறும் நினைவேந்தல்களை கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்பும்விதமாகவே கடந்த காலம்தொட்டு செயற்பட்டு வருகின்றனர் என சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் தேசிய மக்கள் முன்னணி – சைக்கிள் கும்பல் – இவ்வாறு குழப்பங்களை விளைவிக்கின்ற நிலைமை தொடர்பில் நாங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் எடுத்துச்சொல்லி இருக்கின்றோம். நாங்கள் வழமையாக இந்த இடத்திலே தொடர்ச்சியாக முன்பதிவு செய்து நிகழ்வுகளை செய்து வருவது எல்லோருக்கும் தெரியும். எங்களுடைய நிகழ்வுகள் மிகவும் உணர்வு பூர்வமாக எந்தவித குழப்பங்களுமின்றி கடந்த காலங்களிலே மிக அமைதியாக நடைபெற்று வந்தன்ச்.

என்னை பொறுத்தமட்டில் நான் மீண்டும் மீண்டும் சொல்லுகின்ற ஒரு விடயம். அவர்கள் அரசாங்க தரப்போடு இணைந்து இந்த நினைவேந்தல்களை நீர்த்துப்போக செய்கின்ற அல்லது குழப்புகின்ற மிக மோசமான நடவடிக்கைகளிலே காலாகாலமாக ஈடுபட்டு வருகிறார்கள். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் மிக அமைதியாக கடந்த பல ஆண்டுகளாக எங்களாலே செய்யப்பட்டு வந்த இடத்திலே அதை குழப்புகின்ற விதமாக அந்த இடங்களை முன் பதிவு செய்து, அவர்களும் செய்யப்போவதில்லை, எங்களுடைய அந்த உணர்வுபூர்வமான ஆவணப்படுத்தல்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, அது மக்கள் மத்தியிலே கடத்தப்படக்கூடாது என்பதற்காக வேண்டும் என்று குழப்புகின்றனர். அவர்களிடம் எத்தகைய ஆவணங்களும் இல்லை, வரலாறுகளும் இல்லை. ஆனால் இந்த இடத்தை முன் பதிவு செய்து எங்களுடைய நிகழ்வைக் குழப்ப வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காக இதைச் செய்திருக்கிறார்கள்.

அதேநேரம் மாநகர சபையோடு நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்ற பொழுது அவர்கள் எங்களுக்கு மாநகர சபையிடம் கொடுக்க வேண்டாம் என்ற விடயத்தையும் அவர்களுக்கு சொல்லி இருக்கிறார்கள். நாளைய தினம் (இன்றையதினம்) மாநகர சபை யாருக்கு வழங்குவது அல்லது இருதரப்புக்குமே வழங்காமல் அந்த இடத்தை வெறுமையாக வைத்திருப்பதா என்கின்ற முடிவை தங்கள் எடுத்துச் சொல்வதாக எங்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே மாநகர சபை இரண்டு தரப்பையும் இணைந்து செய்யுமாறு எங்களுக்கு ஒரு கடிதம் தந்தது. அதன் அடிப்படையில் பணத்தைச் செலுத்துமாறு எங்களுக்கு ஒரு கடிதம் தந்திருந்தது. அந்த அடிப்படையிலே நாங்கள் மாநகர சபைக்கு பணத்தை செலுத்துவதற்காக சென்றபொழுது மாநகரசபையிலே சொல்லப்பட்டது. கஜேந்திரகுமார் அண்ணாவுடைய தரப்பு இதை எங்களுக்கு கொடுக்கக் கூடாது, இல்லாவிட்டால் இரண்டு தரப்புக்கும் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள் என எங்களுக்கு தகவல் சொல்லப்பட்டது.

சுமூகமாக தீர்க்க வேண்டும் என்று தாங்கள் முயற்சிப்பதாக மாநகர சபையினால் எங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த ஆவண காப்பகத்தைப் பார்த்து பலர் வரலாற்றை தெரிந்து கொள்வதும் தியாக தீபம் திலீபன் அண்ணாவினுடைய கடந்த காலங்களை அறிந்து கொள்வதும் வழமையாக இருக்கின்ற ஒரு செயற்பாடு என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதை வெற்றிகரமாக குழப்புகின்ற முன்னனியிலே அரசாங்க தரப்போடு இயங்குகின்ற இந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுடைய சைக்கிள் தரப்பு ஈடுபட்டு வருகிறது.

அவர்கள் கூட்டாக இணைந்து இருக்கின்ற என்.பி.பி. தரப்பாக இருக்கலாம் அல்லது முன்னாள் ஆயுத குழுக்களாக இருக்கலாம். கஜேந்திரகுமார் அண்ணாவுடன் இணைந்திருக்கிற இந்த கொள்கை கூட்டு தரப்புகள் தமிழ் மக்களுடைய உணர்வுகளை எப்பொழுதும் பிரதிபலித்தவர்கள் அல்லர்.

தாயகத்தில் நடைபெறும் நினைவேந்தல்களை கஜேந்திரகுமர் மற்றும் கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்பும் விதமாகவே கடந்த காலம் தொட்டு செயற்பட்டு வருகின்றனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை மிக உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு முன்னெடுத்து வரும் போது , அதனை குழப்பினர். மட்டக்களப்பில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகளை குழப்பினர். நல்லூரில் தியாக தீபத்தின் நிகழ்வுகளை குழப்பினார். மாவீரர் துயிலுமில்லங்களில் குழப்பங்களை ஏற்படுத்தினர். இவ்வாறாக அவர்கள் தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான நினைவேந்தல் நிகழ்வுகளை காலகாலமாக குழப்பி வருகின்றனர். இந்நிலையிலையே, தியாகதீபத்தின் ஆவணக்காட்சிகூடத்தை குழப்பும் விதமாக அக் காணியை தாம் முன் பதிவு செய்துள்ளனர்.

நிச்சயமாக தியாக தீபம் திலீபன் அண்ணாவினுடைய நினைவேந்தலையும் மாவீரர் தின நினைவேந்தல்களையும் குழப்புகின்ற வேலை திட்டங்களிலே இந்தத் தரப்பு ஈடுபட்டால் அதுக்கு கடுமையான பதிலடியை நாங்கள் கொடுப்பதற்கும் தயங்கப் போவதில்லை.

ஆனால் நாங்கள் ஏற்கனவே ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறோம். மிகத் தாழ்மையாக தயவு செய்து நீங்கள் உங்களுடைய குளறுபடிகளை இந்த நிகழ்வுகளை குழப்புகின்ற செயல்பாடுகளை நிறுத்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை கொடுத்திருக்கிறோம். அதற்கு சாதகமான பதில் வராவிட்டால் நாங்கள் அதற்கான பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருக்கும். ஏன் இவர்கள் இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பொலிஸார் மற்றும் அவர்களுடன் கூட்டு வைத்து செயல்படுகின்ற என்.பி.பி. தரப்பு இதைப் பயன்படுத்தி நாளை நீதிமன்றத்தினுடைய உத்தரவை எடுத்து இந்த நிகழ்வுகளை தடை செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கான முன் ஆயத்த குழப்பங்களில்தான் இவர்கள் ஈடுபடுகிறார்கள்.

பார்த்தீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொன் மாஸ்டரை

தொலைபேசியில் பல தடவைகள் தொடர்பு கொண்டும் முயற்சி பலனளிக்கவில்லை. நாங்கள் கொடுத்த கடிதம் தொடர்பில் கூட இதுவரை பதில் கிடைக்கவில்லை.

அவர்கள் தங்களுடைய குடும்ப நலன்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக தமிழ் மக்களுடைய உணர்வுகளை விளையாடுவது, அதை பகடைக்காயாக வைப்பது ஏற்புடையது அல்ல என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி சொல்லுகின்றேன். இந்த இடத்தில் மீண்டும் நாங்கள் கோரிக்கை விடுகிறோம். இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் வழமை போன்று நடத்தியதை தயவு செய்து குழப்ப வேண்டாம். நீங்கள் தமிழ் மக்களாலே மன்னிக்கப்பட மாட்டீர்கள். உங்களுக்கு ஏற்கனவே கடவுளாலே பல தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்பதையும் நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்துகின்றோம் – என்றார்










# விவசாயிகள் பெரும் நெருக்கடியில்! அரசைக் குறை கூறுகின்றார் சஜித்

இன்று நமது நாட்டில் விவசாயம் செய்வது கடினமானதொன்றாக மாறிவிட்டது. உயர்தர உரமோ அல்லது உர மானியங்களோ கிடைத்தபாடில்லை. மலிவு விலையில் வேளாண்மைக்கான இரசாயனப் பொருள்கள் கிடைத்தபாடில்லை. உபகரணங்களின் விலை அதிகரித்து வருவதற்கு மத்தியில், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ள நிலையிலும், யானை – மனித மோதல் போன்ற காரணங்களால் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டு, சிரமங்களுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளை செய்து வந்த போதிலும்கூட, இன்று நெல் அறுவடைக்கு உத்தரவாத விலை கூட கிடைக்காத நிலையே காணப்படுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நெல்லின் உத்தரவாத விலை கிலோ ஒன்றுக்கு ரூ.120 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும், தேர்தல் காலத்தில், உத்தரவாத விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.150 ஆக, சட்டங்கள் மூலம் உறுதிப்படுத்தித் தருவோம் என்று இன்றைய ஆளும் தரப்பினர் முழங்கினர். இன்று நெல்லை ரூ.90-95க்கே கொள்வனவு செய்கின்றனர். இன்று, உத்தரவாத விலை களத்தில் யதார்த்தமான ஒன்றாக மாறவில்லை. வெறும் தேர்தல் வாக்குறுதியாகவே காணப்படுகின்றது. அவ்வாறே உர மானியமும் உள்ளது. இவற்றிக்கு மத்தியில் விவசாயிகள் பல சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைக் கூட சுரண்டும் நிலையை நாடு அடைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரம், விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஓயாமடுவ கிராமத்தில் ஸ்ரீ உத்தரவாபி விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வணக்கத்திற்குரிய யசோதரா மகா தேவியின் உருவச்சிலை அறை மற்றும் பத்தினி விகாரை என்பவற்றின் திறப்பு விழாவில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார். இதற்கான நிதி நன்கொடையை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் திருமதி குருகே இரோஷா தயானி வழங்கினார். இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரின் பாரியார் திருமதி ஜலனி பிரேமதாஸ மற்றும் மாவட்ட அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டில் வறுமை நிலை உருவாகி, பல கடுமையான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது. பணம் இல்லாமல், நுகர்வு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் குறைந்துள்ளன. 2028 முதல் ஆண்டுதோறும் அமெரிக்க டொலர் 5.6 பில்லியன் கடனை அடைக்கப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 5 வீதமாகப் பேணிச் செல்ல வேண்டும். என்றாலும், இது நடந்தபாடில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு பதில்களை தேட வேண்டியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இலவச மருத்துவம் வெறும் பெயரளவில் மாத்திரமே உள்ளது. நாடு முழுவதும் மருந்துகளுக்குக் கடுமையான தட்டுபாடு நிலவுகின்றது. அரச மருத்துவமனைகளில் கூட போதிய மருந்துகள் இல்லை. எனவே, தனியார் மருந்தகங்களில் மருந்து வாங்குவதற்கு நிறையப் பணம் செலுத்த வேண்டிய நிலைக்கு நோயாளிகள் தள்ளப்பட்டுள்ளனர். கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான இலவச மருந்துகளை வழங்க முடியாவிட்டால், இலவச சுகாதாரக் கொள்கை பயனற்றதாகி விடும்.

விவசாயத்தைப் போலவே சுகாதாரமும் ஓர் அடிப்படை மனித உரிமையாகும். எனவே சுகாதாரத் துறைக்கு கூடிய பக்கபலத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தேர்தல் காலத்தில் மட்டுமே அரசாங்கம் விவசாயியை நினைவில் வைத்திருந்தது. இன்று விவசாயிகள் மறந்து விடப்பட்டுள்ளனர். தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெறுவதற்காக விவசாயிகளை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்தாலும், அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி விவசாயிகளைப் பாதுகாக்க முன்நிற்கின்றமை போலவே இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாடுபடும். – என்றார் சஜித்.







# எத்தகைய வெறுப்பைக் கக்கினாலும் நாங்கள் முன்னேறிச் செல்வோம்

## விஜய் அறிக்கை

யார் எத்தனைக் கூப்பாடு போட்டாலும், எப்படிக் கதறினாலும், எத்தகைய வெறுப்பைக் கக்கினாலும் நாம் முன்னேறிச் செல்வோம் என்று த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நமது மதுரை மாநாட்டில் அறிவித்ததைப் போலவே. "வாகை சூடும் வரலாறு திரும்புகிறது: உங்க விஜய் நான் வரேன்" என்ற நம் மக்கள் சந்திப்பை, பல்வேறு அரசியல் திருப்புமுனைகளை அமைத்துத் தந்த திருச்சியில் திக்கெட்டும் கேட்கும் வகையில் நேற்று முன்தினம் தொடங்கினோம்.



எளிதாகக் கடந்துவிடும் தூரத்தைக்கூட மக்கள் கடலில் பல மணிநேரம் நீந்தியே கடக்க வேண்டிய சூழல் இருந்தது என்பதை நாடும் நன்றாகவே உணர்ந்தது. இதையே நமது கொள்கை மற்றும் அரசியல் எதிரிகளும் இன்னும் ஆழமாக உணர்ந்திருப்பர்.

"விஜய் வெளியே வரவே மாட்டான். மக்களைச் சந்திக்கவே மாட்டான்" என்று ஆள் வைத்துக் கதையாடல் செய்தோர், இப்போது வெவ்வேறு விதங்களில் புலம்பத் தொடங்கி உள்ளனர். இதை முன்கூட்டியே ஒப்புக்கொள்வது போலத்தான் தங்களது கதறலை முப்பெரும் விழா என்கிற கடிதம் ஒன்றின் வாயிலாக வெளிப்படுத்தியிருந்தனர்.

புதிய எதிரிகள் என்று பெயர் சொல்லாமல் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததையும் காண முடிந்தது. பழையன கழிதலும் புதியன புகுதலும்தானே பழந்தமிழ் மரபு? இன்னும் என்னென்னவோ வெறுப்பையும் விரக்தியையும் கக்கும் வார்த்தைகள் அக்கடிதத்தில் அழுதுகொண்டிருந்தன.

வெளியே கொள்கை. கொள்கை என்று பேசுவதும் உள்ளுக்குள்ளே பாஜகவோடு உறவாடுவதும் யார் என்று மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர். எனவே, கொள்கைக் கூப்பாடு போட்டு ஏமாற்றிக்கொண்டே கொள்ளை அடிப்போர் யார் என்று தமிழக மக்களுக்குத் தெரியாதா என்ன?

பொய் வாக்குறுதிகளை அள்ளி அள்ளித் தெளித்து. மக்களை நம்ப வைத்து ஏமாற்றி ஆட்சிக்கு வந்துவிட்டு, கேள்வி கேட்டுத் தங்களது உரிமைகளுக்காகப் போராட வரும் அதே சாமானிய மக்கள் மீது அடக்குமுறையை ஏவி விடுபவர் யார் என்றும் தமிழக மக்களுக்குத் தெரியாதா என்ன?

தமிழகம் தாண்டியும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு உருவாகி இருக்கும் தன்னெழுச்சியான புத்தெழுச்சி, இப்போது அவர்களை ஏகத்துக்கும் குமுற வைத்துள்ளது. பொதுமக்களுக்கு இவர்கள் செய்யும் இடையூறுகள் அனைத்தையும் பற்றி, மக்களே கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர்.

யார் எத்தனைக் கூப்பாடு போட்டாலும், எப்படிக் கதறினாலும், எத்தகைய வெறுப்பைக் கக்கினாலும் நாம் முன்னேறிச் செல்வோம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உயரிய அடிப்படைக் கோட்பாட்டோடு, மதச்சார்பற்ற சமூக நீதி என்ற மகத்தான கொள்கையோடு பாதை வகுப்போம்.

தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அண்ணல் அம்பேத்கர், வீரமங்கை வேலுநாச்சியார், மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் ஆகியோரின் கொள்கை வழிகாட்டுதலுடன் வெற்றி நடை போடுவோம். 2026 சட்டமன்றத் தேர்தலில் 1967, 1977 தேர்தல்களில் நிகழ்ந்ததைப் போல மாபெரும் வெற்றி விளைவை மக்கள் சக்தியின் பேராதரவுடன் தமிழக வெற்றிக் கழகம் நிச்சயம் நிகழ்த்திக் காட்டும். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் பயங்கரவாதிகளை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு

பாகிஸ்தானால் வளர்க்கப்படும் பயங்கரவாதிகளை தேசவிரோத சக்திகளுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது என பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

அசாமின் டார்ரங்கில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,

"நமது துணிச்சலான இராணுவ வீரர்களுடன் நிற்பதற்குப் பதிலாக, ஊடுருவல்காரர்களையும் இந்தியாவின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்களையும் காங்கிரஸ் ஆதரிக்கிறது. பாகிஸ்தானால் வளர்க்கப்படும் பயங்கரவாதிகளை தேசவிரோத சக்திகளுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. காங்கிரஸ் கட்சி மீண்டும் மீண்டும் தேசவிரோத சக்திகளுக்கு பாதுகாப்பு அளித்துள்ளது.

ஒபரேஷன் சிந்தூருக்குப் பிறகு எனது முதல் அசாம் பயணம் இதுவாகும். காமாக்யா அம்மனின் ஆசியுடன், ஆபரேஷன் சிந்தூர் வெற்றி பெற்றது. இன்று, இந்த புனித பூமியில் இருப்பதன் மூலம் நான் ஒரு தெய்வீக தொடர்பை அனுபவிக்கிறேன்.

செங்கோட்டையில் சுதந்திர தின உரையில், நான் சக்ரதாரி மோகனை நினைவு கூர்ந்தேன். இன்று, இந்த புனிதமான சந்தர்ப்பத்தில், தேசிய பாதுகாப்பிற்கான சுதர்சன சக்கரம் எனும் வான் பாதுகாப்பு அமைப்பு பற்றிய நமது இலட்சியத்தை நான் மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

2035ஆம் ஆண்டுக்குள், இந்த சுதர்சன சக்கர வான் பாதுகாப்பு



அமைப்பை நவீனப்படுத்தி, வலுப்படுத்துவோம். இது பயங்கரவாத தாக்குதல்களிலிருந்து நம்மைக் காப்பது மட்டுமல்லாமல், தீர்க்கமாக பதிலடியும் கொடுக்கும்" என்று தெரிவித்தார்.

# வரி, பொருளாதாரத் தடையினால் போருக்குத் தீர்வு காண முடியாது

## ட்ரம்புக்கு சீனா பதில்



வரி விதிப்பதாலோ அல்லது பொருளாதாரத் தடை விதிப்பதாலோ போருக்குத் தீர்வு காண முடியாது என ட்ரம்புக்கு சீனா பதிலளித்துள்ளது.

அத்துடன், அவை பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் எனவும் சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

ரஷ்யா மற்றும் யுக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், போர் முடியும் வரை சீனா மீது 50 முதல் 100 சதவீதம் வரிகள் விதிப்பது உள்ளிட்ட ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்கும் விரிவான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 'நேட்டோ' நாடுகளை வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், வரியால் போர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

வரி விதிப்பதும் பொருளாதாரத் தடை விதிப்பதும் நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என சீனா அறிவித்துள்ளது.

போர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பதற்கு சீனா உறுதிபூண்டுள்ளதாகவும், நாம் போர்களில் பங்கேற்கத் திட்டமிடவில்லை என்றும் சீனா அறிவித்துள்ளது.

மேலும், அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண வேண்டும் என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது.

சீனாவும், ஐரோப்பாவும் போட்டியாளர்களாக இருக்காமல், நண்பர்களாக இருக்க வேண்டும் எனவும் சீனா அறிவித்துள்ளது.



# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது தாக்குதல் ரஷ்யாவின் மசகு எண்ணெய் உற்பத்தி பாதிப்பு

ரஷ்யாவின் முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது உக்ரைன், ஆளில்லா விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதன் காரணமாக, அந்த சுத்திகரிப்பு நிலையம் பற்றி எரிந்ததால், மசகு எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் வடமேற்கு பகுதியிலுள்ள லெனின்கிராட் பகுதியில், கிரிஷி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 177 கோடி மெட்ரி தொன் மசகு எண்ணெய் ஆண்டுதோறும் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

இது முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் ஒன்றாக உள்ள நிலையில், இந்த நிலையத்தின் மீது உக்ரைன் ஆளில்லாத விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை உக்ரைன் இராணுவ அதிகாரி உறுதி செய்துள்ளார்.

உக்ரைன் அனுப்பிய 3 ஆளில்லாத விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், அதன் உதிரிப் பாகம்தான் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது விழுந்ததாகவும்குறித்தஇராணுவஅதிகாரிதெரிவித்துள்ளார்.

எனினும், இது குறித்து ரஷ்ய அதிகாரிகள் எதுவும் கூறவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்யா ஆக்கிரமிப்பு கிரிமீயா பகுதியில் 80 ஆளில்லா விமானங்களை உக்ரைன் அனுப்பியுள்ள நிலையில், அவை அனைத்தும் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ரஷ்ய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -15.09.2025




இன்று சோர்வு மனப்பான்மையும் தேவையற்ற கவலைகளும் காணப்படும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்வது நல்லது.

பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.உங்கள் தவறுகளை கண்டுணர்ந்து அதனை சரிசெய்து கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.உங்கள் துணையை புரிந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது.தேவையில்லாத செலவினங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். விஷயங்களை யதார்த்தமாக கையாள வேண்டும். உடன் பிறந்தவர்களால் சில பிரச்சினைகள் நேரலாம்.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். சில சமயங்களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமை மோசமாக இருக்கும். அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

மனஅழுத்தம் காரணமாக கழுத்தில் விறைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சவலான நாள். நல்ல இசையைக் கேட்பது, ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவது போன்றவை நற்பலன்களை அளிக்கும்.

பணியிடச் சூழல் அதிருப்தியை அளிக்கும்.அது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் தீவிரம் காட்டுவீர்கள்.நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை உருவாக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் இருக்காது. அதனால் பிறரிடம் கடன் வாங்க நேரும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காய்ச்சலினால் தொந்தரவு ஏற்படலாம்.




இன்று உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் பரிபூரணமான நாள். மகிழ்ச்சிகரமான தருணங்கள் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அள்ளித்தரும். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துத்தரவேண்டும் என்ற மனஅழுத்தம் காணப்படும். சகபணியாளர்களுடனான நல்லுறவு பயனளிக்கும்

உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்க வேண்டும் என்ற உந்துதல்அதிகரிக்கும்.

சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். சிறந்த ஆற்றலுடன் துடிப்புடன் நீங்கள் காணப்படுவீர்கள்.




இன்று அதிர்ஷ்டமான நாள்.முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.இன்று மனம் தெளிவுடன் காணப்படும்.அதனால் பல நற்பலன்கள் காணலாம்.

நீங்கள் பணியை அனுபவித்து செய்வீர்கள்.உங்கள் திறமைக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

வெளிப்படையான உணர்வுகளின் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.இன்று வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று நீங்கள் சுறுசுறுப்புடனும் திடமாகவும் காணப்படுவீர்கள். ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை.வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் உங்கள் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்கள் பணி செயல்திறன் நன்றாக இருக்கும்.உங்கள் முயற்சிக்கான பாராட்டைப்பெறுவீர்கள்.

நல்ல புரிந்துணர்வை வளர்ப்பதற்கு உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். துணையிடத்தில் சகஜமான அணுகுமுறை வேண்டும்.

செலவினங்கள்அதிகரித்து காணப்படும்.தேவையில்லாத செலவினங்களை தவிர்க்க வேண்டும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.இன்று தொண்டையில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று குறைந்த வளர்ச்சியே காணப்படும்.சவால்கள் நிறைந்திருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவது இன்று கடினமாக இருக்கும்.

சகபணியாளர்களுடன் சுமுகமான உறவுமுறை காணப்படாது என்றாலும் பொறுமையுடன் கையாண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கவனமற்ற மற்றும் அக்கறையற்ற பேச்சின் மூலமாக தவறான புரிந்துணர்வு ஏற்படும்.அதனால் கவனமாக செயல்பட்டு நல்ல புரிந்துணர்வை உருவாக்க வேண்டும்.

பயணத்தின் பொழுது பணஇழப்பு நேரலாம். கவனமாக கையாள வேண்டும்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது.தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று நம்பிக்கையோடு காணப்படுவீர்கள்.நற்பலன்கள் கிடைப்பதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளன. இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் பணி செயல்திறனில் நல்ல முன்னேற்றம் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

வெளியிடங்களுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்ளலாம்.இது இருவருக்கும் புத்துணர்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.

உங்கள் வீட்டுப்பெரியவர்களிடமிருந்த பணம் பரிசாக கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

நல்ல ஆரோக்கியம் காணப்படுகின்றது.ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் -15.09.2025




உங்கள் முயற்சிகள் வெற்றியடைவதற்கு சாதகமான நாள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் பணி செயல்திறன் பாராட்டத்தக்க வகையில் இருக்கும். உங்களின் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் ஆழ்ந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வை அனுபவித்து மகிழலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள்சேமிப்பு நிலை அதிகரிக்கும். முக்கியமான முதலீடுகளுக்கு இன்று உகந்த நாள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். சாதகமான சூழ்நிலை உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.




உங்கள் அனுபவம்உங்களுக்கு நல்ல பாடத்தை கற்றுத் தரும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கும்.

இன்று பரபரப்பான வேலைகள் காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணை உங்களிடம் முரண்பட்டு இருப்பதாக உணர்வீர்கள். நட்பான அணுகுமுறை கொண்டு அவரை புரிந்து கொள்ள முயற்சி செய்வது நல்லது.

வீட்டுச் சீரமைப்பிற்காக பணத்தை செலவு செய்வீர்கள். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

சளி மற்றும்இருமல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். குளிர்ந்த பானங்கள் அருந்துவதை தவிர்க்கவும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பதற்கு உங்களிடம் தைரியமும் உறுதியும் இருக்க வேண்டியது அவசியம். எதையும் இலேசாக எடுத்துக்கொள்ளும் போக்கு உங்களுக்கு நற்பலன்களைத்தரும்.

அதிகமான பணிச்சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். கொடுக்கப்பட்ட பணிகளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் அமைதியான அணுகுமுறையைக் கையாண்டு நல்ல புரிந்துணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

பயணத்தின்பொழுது பணஇழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். சத்தான ஆகாரங்களை உட்கொள்ளுங்கள்.




இன்று அனைத்து வகையிலும் முன்னேற்றம் காணப்படும். உங்கள் முயற்சி மற்றும் உற்சாகம் மூலம் தொடர்ந்து வெற்றி கிடைக்கும்.

பணி சார்ந்த புதிய வாய்ப்புகள் ஆழ்ந்த திருப்தியை உருவாக்கும். பணியை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள்.

உங்கள் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

அதிக பணவரவு காணப்படும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது. மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இழப்பீட்டுக் கொடுப்பனவில் லஞ்சம் அறவீடா? மன்னாரில் அலுவலருக்கு எதிராக விசாரணை!

(ந.லோகதயாளன்)

மன்னாரில் மக்களுக்கு இழப்பீடு வழங்கிய நிதியில் பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றார் என்ற குற்றச் சாட்டில் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக விசாரணை இடம்பெறுகின்றது.

இறுதி யுத்த காலத்தில் ஏறபட்ட இழப்புகளிற்கு பகுதி பகுதியாக இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் இழப்பீடுகளின் வரிசையில் 3 மாதங்களின் முன்னரும் ஒரு கட்ட இழப்பீடு வழங்கப்பட்டது. இதன்போது மன்னாரில் வழங்கப்பட்ட இழப்பீட்டு கொடுப்பனவில் முறையற்ற விதத்தில் பணம் அறவிடப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இழப்பீட்டைப் பெறும் பயனாளிகள் மீண்டும் 3 வீதப் பணத்தை அரசிற்கு செலுத்த வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டி அந்த தொகைக்கான பணம் பயனாளிகளிடம் இருந்து பெறப்பட்டுள்ளது.



இது தொடர்பான முறைப்பாடுகளில் தற்போது ஓரிரு முறைப்பாடுகள் உறுதி செய்யப்பட்டமையினால் முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விசாரணையின் பொருட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அப் பொறுப்பில் இருந்து மாற்றப்பட்டுள்ளார்.